DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 01 / 2026 |
| Prosecution Witness | : | P.W. 1 |
| Name | : | ஆதவன் |
| Father's /Husband Name | : | அழகர்சாமி |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 35 |
| Occupation | : | இரண்டாம் நிலைக்காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th February, 2026
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்பொழுது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அயற்பணியாக கணினி பிரிவில் பணியாற்றி வருகிறேன். கடந்த 19.12.2025-ம் தேதி நான் நன்னிலம் காவல் நிலைய பொறுப்பில் பாரா பணியாக இருந்தபொழுது 20.12.2025-ம் தேதி அதிகாலை 02.45 மணியளவில் காவல் நிலையத்திற்கு வெளியே ஒரே கூச்சல் சத்தம் கேட்டது நான் வெளியே சென்று பார்த்தபோது காவல் நிலையத்திற்கு எதிரே வசிக்கும் ஆஜர் எதிரி ராஜா என்பவர் அவரது மனைவி மற்றும் மகனுடன் சண்டைபோட்டுக்கொண்டு அசிங்கமான வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்தார் அதை பார்த்து நான் அவரிடம் சென்று இரவு நேரத்தில் ஏன் சத்தம் போட்டு பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டபோது ஆஜர் எதிரி என்னை பார்த்து நான் அப்படிதாண்டா கத்துவேன் என்றும், உன் வேலை மயிர பாருடான என்றும், நீ போலிசுனா என்ன பெரிய ஆளு புண்டையா என்று அசிங்கமான வார்த்தைகளால் கூறி என் நெஞ்சில் கை வைத்து தள்ளி எனது அரசுப்பணியை செய்ய விடாமல் தடுத்து பிரச்சனையில் ஈடுபட்டார். அதனால் நான் காவல் நிலைய பொறுப்பு அலுவலரான தலைமைக்காவலர் சந்திரமோகன் என்பவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டி கைப்பேசியை எடுப்பதற்காக காவல் நிலையத்திற்கு சென்றபோது எதிரி ராஜா அவரது வீட்டிற்கு சென்று கத்தியை எடுத்துக்கொண்டு வந்து காவல் நிலையத்திற்கு வந்து கத்தியை காண்பித்து என்னை பார்த்து கொள்ளாமல் விடமாட்டேன் என்றும், என்னைக்கா இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றும் மிரட்டினார் நான் அரசுப்பணியில் சீருடையில் இருந்தபோது என்னை எதிரி அசிங்கமாக பேசியதால் எனக்கு மிகுந்த அவமானம் ஏற்பட்டது. மேலும், எதிரி என்னை மிரட்டியதால் எனக்கு உயிர் பயம் ஏற்பட்டது. பிறகு, சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் மனு நான் கொடுத்தது தான் அந்த புகார் மனு

**அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.



<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் சம்பவ தினத்தில் மதியம் 03.00 மணிக்கு புகார் அளித்தேன் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த மாதத்தில் எத்தனை நாட்கள் இரவு பணி செய்தேன் என்றால் இரண்டு முறை செய்தேன். சம்பவத்தன்று நான் மட்டும் தான் இரவு பணியில் இருந்தேன் என்றால் சரிதான், மற்றவர்கள் ரோந்து பணிக்கு சென்றுவிட்டார்கள். நான் சம்பவ சமயத்தில் இரவு பணி செய்ததற்கான ஆவணத்தை புகாருடன் அளிக்கவில்லை என்றால் இல்லை. எதிரி அவரது மனைவி மகனுடன் சண்டையிட்டதற்கு அவர்கள் ஏதும் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்தில் எவ்வளவு இடைவெளி என்றால் சுமார் 20 மீட்டர் இருக்கும். சம்பவ இடத்தில் நான் மட்டும் தான் இருந்தேன் என்றால் சரியல்ல, அருகில் வசிக்கும் சுப்ரமணியன் என்பவரும் சம்பவத்தை பார்த்துக்கொண்டிருந்தார். இரவு பணி என்பதால் நான் சீருடையில் இல்லாமல் மற்ற நிற உடையில் இருந்தேன் என்றால் சரியல்ல, பணி நேரம் என்பதால் சீருடையில் தான் இருந்தேன். எதிரி என்னை திட்டியதால் எனக்கு அவமானமும், மிரட்டியதால் பயமும் ஏற்பட்டதாக புகாரிலும், விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் 20 மீட்டர் இடைவெளி என்பதால் நான் எதிரிக்கு அருகில் செல்லவில்லை என்றால் எதிரி தான் எனது அருகில் வந்து சம்பவத்தில் ஈடுபட்டார். எதிரி என்னை மிரட்டி சம்பவத்தில் ஈடுபட்டபோது நான் காவல்நிலையம் சென்று கதவை மூடினேன் என்றால் எதிரி கத்தியை எடுத்து வந்த பிறகு தான் பயத்தில் கதவை மூடினேன். நான் போலிசார் விசாரணையில் கதவை சாத்தியதாக கூறினேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் உள்ள கதவை சாத்தியதால் வெளியே நடக்கும் விபரங்கள் தெரியாது என்றால் சரிதான் ஆனால் கேட்டிற்கு வெளியே நடக்கும் விபரம் தெரியும். காவல் நிலையத்தில் சி.சி.டி.வி கேமரா உள்ளது என்றால் சரிதான். எனது உயரதிகாரிக்கு தகவல் தெரிவிக்க போன் செய்தது தொடர்பான ஆவணங்கள் விசாரணை அதிகாரியிடம் அளிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி என்னை தள்ளியதில் எனக்கு காயம் ஏற்பட்டு நான் மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். எதிரி அவரது குடும்பத்தாருடன் சண்டைபோட்டுக்கொண்டிருந்த சத்தம் கேட்டுதான் நான் சென்று முதலில் பார்த்தேன் என்றால் சரிதான். எதிரி

கொண்டுவந்ததாக கூறப்படும் கத்தியின் அளவு மற்றும் வடிவத்தை புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரி மீது பொய் புகார் அளித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2026.02.12 16:26:31 +0530

District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 01 / 2026 |
| Prosecution Witness | : | P.W. 2 |
| Name | : | சந்திரமோகன் |
| Father's /Husband Name | : | மகாலிங்கம் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 43 |
| Occupation | : | தலைமைக்காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th February, 2026 Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்பொழுது நன்னிலம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.12.2025-ம் தேதி அதிகாலை 02.45 மணியளவில் நான் நன்னிலம் காவல் நிலைய நிலைய பொறுப்பில் இருந்தேன். அன்றைய தினம் நான் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது காவல் நிலைய பணியில் இருந்த இரண்டாம் நிலைக்காவலர் ஆதவன் என்பவர் எனக்கு போன் செய்து காவல்நிலையத்திற்கு எதிரே வசிக்கும் ஆஜர் எதிரி ராஜா என்பவர் அவரது மனைவி மற்றும் மகனுடன் சண்டைபோட்டு பிரச்சனை செய்ததாகவும் அதை பார்த்த காவலர் ஆதவன் அவரிடம் சத்தம் போடவேண்டாம் என்றும், வீட்டிற்கு போக சென்னதாகவும் அதற்கு எதிரே ராஜா அவரை பார்த்து போலிசுனா என்ன பெரிய ஆளு புண்டையா என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசி சீருடையில் இருந்த அவரது நெஞ்சில் கை வைத்து தள்ளி அவரது அரசுப்பணியை செய்ய விடாமல் தடுத்து பிரச்சனையில் ஈடுபடுவதாக கூறி எனக்கு தகவல் தெரிவித்தார். நான் தகவல் அறிந்து உடனடியாக காவல்நிலையம் வந்த போது எதிரி அவரை கத்தியை எடுத்துக்கொண்டு வந்து கத்தியை காண்பித்து கொள்ளாமல் விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளார். பிறகு, மேற்படி சம்பவம் தொடர்பாக எங்கள் காவல்நிலைய ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தேன். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் சம்பவத்தின்போது எந்த இடத்தில் ரோந்து பணியில் இருந்தேன் என்றால் மாப்பிள்ளைக்குப்பத்தில் இருந்தேன். காவல்நிலையத்திலிருந்து மாப்பிள்ளைக்குப்பம்

எவ்வளவு தூர இடைவெளியில் உள்ளது என்றால் இரண்டு கிலோ மீட்டர் தூர இடைவெளியில் உள்ளது. நான் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நன்னிலம் காவல் நிலையத்தில் சி.சி.டி.வி கேமரா உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 சொல்லிதான் சம்வம் எனக்கு தெரியும் என்றாலும், சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடன் நிலைய ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான். சம்பவம் பற்றிய முழு விபரத்தையும் கைப்பேசியில் மூலம் தெரிவித்தேன் என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு போன் செய்ததற்கான நான் ஆய்வாளருக்கு போனில் தகவல் சொன்னதற்கான ஆவணங்களையும் நீதிமன்றத்தில தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் மாலை சுமார் 05.00 மணியளவில் விசாரித்தார். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2026.02.12 16:26:48 +0530

District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam